## வலிகாமம் தெற்கு பிரதேச சபை

## யாழ்ப்பாணம் மாவட்டம்

### 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்தல்

2019 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் 2020 பெப்ரவரி 28 ஆம் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கை 2020 யூன் 29 ஆம் திகதியும் விரிவான முகாமைத்துவ அறிக்கை 2020 ஆகஸ்ட் 29 ஆம் திகதியும் தவிசாளருக்கு அனுப்பப்பட்டுள்ளது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பகுதியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினை தவிர்த்து வலிகாமம் தெற்கு பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் 2019 திசெம்பர் 31 இன் நிதிநிலமையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

**(அ) நிதிக்கூற்றுக்களை தயாரித்தளிப்பதற்கான கணக்கீட்டுக் கொள்கைகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபையினால் நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்காக பின்பற்றப்பட்ட கணக்கீட்டு கொள்கைகள் நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | பதில் வழங்கப்பட்டிருக்கவில்லை. | கணக்கீட்டுக் கொள்கைகள் நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படல் வேண்டும். |

**(ஆ) கணக்கீட்டுக் குறைபாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்புகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | சபைக்கு உரிமையில்லாத ரூபா 3,242,600 ஆன காணிகளின் பெறுமதி நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையால் காணிகட்டடங்களின் பெறுமதி நிதிக்கூற்றுக்களில் அதிகரித்து காணப்படுகின்றது. | வழக்கு நீதிமன்றில் நிலுவையாக உள்ளது. | உரித்தற்ற காணிகளை நிதிக்கூற்றுக்களில் காட்டுவதனை தவிர்ப்பதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | 10 மயானங்களின் பெறுமதி நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்படாமையினால் காணி கட்டடங்களின் பெறுமதி நிதிக்கூற்றுக்களில் குறைவாகக் காணப்படுகின்றது. | இனிவருங்காலங்களில் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படும். | நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 1.4 இணக்கமின்மைகள்

### 1.4.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| (அ) | 2018 ஆம் ஆண்டின் 19 இலக்க தேசிய கணக்காய்வு சட்டம் | | | |
| | உப பிரிவு 16(2) | வருடாந்த செயலாற்றல் அறிக்கை நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | இனிவருங்காலங்களில் சமர்ப்பிக்கப்படும் | சட்டத்திற்கமைய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டம் | | | |
| | பிரிவு 126 (iii) (ஊ) | ரூபா 158,157 பெறுமதியான ஆன 41 அனுமதியற்ற விளம்பரங்கள் தொடர்பாக உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கட்டணம் செலுத்தாத விளம்பரங்களுக்காக கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளன. | சட்டத்திற்கமைய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | பிரிவு 158 (1) | ஆதனவரி நிலுவை ரூபா 21,241,919 செலுத்தத் தவறியோருக்கு பற்றாணைச்சீட்டு வழங்கப்பட்டிருக்கவில்லை. | நிலுவை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | சட்டத்திற்கமைய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (இ) | 1988 ஆம் ஆண்டின் பிரதேச சபைகள் நிதி நிருவாக விதிகள் | | | |
| | அத்தியாயம் X இன் பிரிவு 193 | உள்ளபடியான வருமானம் மற்றும் செலவு தொடர்பான விபரங்கள் வரவு செலவுத்திட்டத்துடன் ஒப்பிடப்பட்டு முரண்பாட்டுக்கான விளக்கங்களை உள்ளடக்கிய கூற்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | இனிவருங்காலங்களில் இணைத்து அனுப்பிவைக்கப்படும். | உரிய விதிகளுக்கமைய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஈ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்தின் நிதி ஒழுங்கு விதிகள் | | | |
| | இலக்கம் 371 | டிப்பர் கூலிக்காக 2018 இல் செலுத்தப்பட்ட முற்பணம் ரூபா 600,000 இன்றுவரை தீர்வு செய்யப்பட்டிருக்கவில்லை. | விசாரணை அறிக்கை கிடைக்கப்பெற்றதும் தீர்வு செய்யப்படும். | உரிய விதிகளுக்கமைய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (உ) | பொது நிருவாக மற்றும் முகாமைத்துவ அமைச்சின் சுற்றறிக்கை | | | |
| | 2018.01.24 ஆம் திகதிய இலக்கம் 02/2018 | பணியாளர்களிற்கு ஓராண்டுக்கு ஆகக்குறைந்தது 12 மணித்தியாலங்களுக்கு குறையாத பயிற்சி வழங்கப்பட்டமையினை உறுதிப்படுத்த முடியாதுள்ளது. | பயிற்சி வழங்குவதற்கு நடப்பாண்டில் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | சுற்றறிக்கைக்கு அமைய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஊ) | ஏனைய சுற்றறிக்கை | | | |
| | 2018.07.19 ஆம் திகதிய 2018/e உள்ளூராட்சி - 01 ஆம் இலக்க உள்ளூராட்சி சுற்றுநிருபம் | பிரசைகளுக்கு இணையத்தின் மூலமாக சேவைகளை பெறுவதற்கான வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்படவில்லை. | கௌரவ ஆளுநரின் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | சுற்றறிக்கைக்கு அமைய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 132,421,533 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொப்பான முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 69,101,854 தொகையாக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டுகளுக்குரியதாக சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| வருமான மூலம் | 2019 | | | 2018 | | |
|---|---|---|---|---|---|---|
| | மதிப்பிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த நிலுவைகள் | மதிப்பிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த நிலுவைகள் |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரியும் வரியும் | 14,063,700 | 14,884,570 | 24,459,838 | 14,118,700 | 14,936,876 | 20,698,175 |
| வாடகைகள் | 45,022,800 | 44,783,099 | 1,863,071 | 43,696,800 | 42,860,188 | 2,329,771 |
| அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 4,780,000 | 9,790,162 | - | 4,978,000 | 2,896,341 | - |
| ஏனைய வருமானம் | 101,808,205 | 143,597,228 | 23,641,768 | 94,606,854 | 85,319,492 | 18,431,747 |
| | 165,674,705 | 213,055,059 | 49,964,677 | 157,400,354 | 146,012,897 | 41,459,693 |

#### 2.2.2 வீதவரி மற்றும் வரி

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் வீதவரி நிலுவை ரூபா 21,241,919 இனை அறவிடுவதற்கு சபையினால் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | நடுக்கட்டல் உத்தியோகத்தர்கள் மூலம் அறவிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது | வீதவரி நிலுவையினை அறவிடுவதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |

### 2.2.3 வாடகை

| | கணக்காய்வு அவதானிப்புகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | கடை வாடகை நிலுவை ரூபா 168,470 இனை அறவிடுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | அறவிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. | வாடகை நிலுவையினை அறவிடுவதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | குத்தகை நிலுவை ரூபா 1,620,526 இனை அறவிடுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | பதிவழிப்புச் செய்வதற்கு கௌரவ ஆளுநர் அவர்களிடம் அனுமதி கோரப்பட்டுள்ளது. | குத்தகை நிலுவையினை அறவிடுவதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |

### 2.2.4 முத்திரைக் கட்டணங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மாகாண சபையின் பிரதம செயலாளர் மற்றும் அனைத்து அதிகாரிகளிடமிருந்து 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு முத்திரைக் கட்டணங்கள் ரூபா 18,431,747 பெறப்பட வேண்டியிருந்தன. | இதுவரை மாகாண திறைசேரிக்கு கிடைக்கப்பெறவில்லை. | முத்திரைத்தீர்வை உரியகாலத்தில் அறவிடுவதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 3 ஆம் பிரிவின் பிரகாரம், பொதுச் சுகாதாரம், பொதுப் பயன்பாட்டு சேவைகள் மற்றும் பொது வழிகள், மற்றும் மக்களின் சுகம், வசதி மற்றும் நலன்புரி ஆகிய பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பில் அவதானிக்கப்பட்ட விடயங்கள் பின்வருமாறு.

#### (அ) செயல்நடவடிக்கைத் திட்டம்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| உபவிதியின் பிரகாரம், சபையினால் செயல்படுத்தப்பட்டிருக்க வேண்டிய 30 செயற்பாடுகள் தொடர்பில் வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | இனிவரும் காலத்தில் வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்படும் | உபவிதிக்கமைய உரிய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

**(ஆ) செயற்பாடுகளின் செயலாற்றலில் தாமதங்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ரூபா 11,358,341 செலவில் மேற்கொள்ளப்பட்ட 05 செயற்பாடுகள் ஒப்பந்தகாலம் முடிவடைந்து 03 மாதங்களாகியும் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. | செயற்பாடுகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. | ஒப்பந்த வேலையினை உரிய காலத்தினுள் முடிவுறுத்த நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

**(இ) திண்மக் கழிவு முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| திறந்த வாகனங்களில் குப்பைகள் சேகரிக்கப்படுவதால் வீதிகளில் பிரயாணம் செய்யும் பொதுமக்களுக்கு சுகாதாரப் பிரச்சினை காணப்படுவதுடன் வீதி வழியே குப்பைகள் கொட்டி செல்லப்படுகின்றது. | வலைகளை பயன்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது | மூடிய வாகனங்கள் பயன்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |

**(ஈ) சுற்றுச்சூழல் பிரச்சினைகள்**

| | கணக்காய்வு அவதானிப்புகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (i) | திண்மக்கழிவுகள் அகற்றுவதற்காக தெரிவு செய்யப்பட்டிருந்த பிரதேசத்தில் கொசு எண்ணெய் அடித்தல் மற்றும் துர்நாற்றத்தை தடுப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | இவற்றுக்கு எந்தவிதமான தெளிகருவியும் சிபார்சு செய்யப்படவில்லை. | திண்மக் கழிவு முகாமைத்துவத்திற்கு அமைய வினைத்திறனாக நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |
| (ii) | சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு புனர்வாழ்வு மற்றும் இந்து சமய அமைச்சின் நிதி ஒதுக்கீட்டில் 2016 தொடக்கம் நிர்மாணிக்கப்பட்டு வந்த மலக்கழிவு சுத்திகரிப்பு நிலைய நிர்மாணிப்பு வேலைகள் நாளதுவரை பூர்த்தி செய்யப்பட்டிராத காரணத்தினால் சபையின் எல்லைக்குட்பட்ட மலக்கழிவுகளை சுத்திகரிக்க முடியாத நிலை காணப்படுகின்றது. | மாவட்டச் செயலகத்தினால் மேற்கொள்ளப்பட்ட மலக்கழிவு மீள்சுழற்சிச் செயற்றிட்டம் எம்மிடம் கையளிக்கப்படவில்லை. | திண்மக் கழிவு முகாமைத்துவத்திற்கு அமைய வினைத்திறனாக நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |

## 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | உள்ளூராட்சி உதவியாளரினால் தயாரிக்கப்பட வேண்டிய அறிக்கைகள் உரிய காலத்தில் சமர்ப்பிக்கப்படாமையினால் பிரதேசசபைக்குரிய முக்கிய பணிகள் நிறைவேற்றப்படாமல் இருந்தது. | உரிய அறிக்கைகள் தயாரிக்கப்படுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. | அறிக்கைகள் உரிய காலத்தில் சமர்ப்பிக்கப்பட நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | பொதுமக்கள் சேவை பட்டயத்தினை காட்சிப்படுத்தியுள்ள போதும் அதில் குறிப்பிடப்பட்டதற்கு முரணாக மக்களுக்கு வழங்கப்பட்ட சேவைகள் காலம் தாழ்த்தியே வழங்கப்பட்டிருந்தது. | வேறு திணைக்களங்களின் சிபாரிசு உரிய காலத்தில் கிடைக்காமையினாலேயே சேவைகள் காலம் தாழ்த்தி வழங்கப்பட்டது. | மக்களுக்குரிய சேவையினை உரிய காலத்தில் வழங்கப்பட நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டில் நிலையான வைப்பில் உள்ள நிதி ரூபா 241,147,508 அபிவிருத்தித் திட்ட வேலைகளினை நடைமுறைப்படுத்தாது வங்கியில் வட்டி வருமானம் உழைக்கும் நோக்குடன் வைப்பிலிடப்பட்டிருந்தது. | வேலைத்திட்டங்கள் மேற்கொள்ளப்படும் போது நிலையான வைப்புக்கள் மீளப்பெறப்படுகின்றன. | அபிவிருத்தித் திட்ட வேலைகளை உரிய காலத்தில் நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும |
| (ஈ) | மீளாய்வாண்டில் 95 கட்டட அனுமதி விண்ணப்பங்களுக்கு அனுமதி வழங்கப்பட்டிருக்கவில்லை. | வேறு திணைக்களங்களின் சிபாரிசு உரிய காலத்தில் கிடைக்காமையினாலேயே தாமதமடைகிறது. | உரிய காலத்தில் கட்டட அனுமதிகள் வழங்கப்பட நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 3.3 மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபையானது உரியவாறு மனித வளத்தைப் பெற்று ஈடுபடுத்தாமையினால் அத்தகைய 19 மனிதவளங்களினால் நிறைவேற்றப்பட வேண்டிய சேவைகள் தாமதமடைந்துள்ளமை கணக்காய்வில் அவதானிக்கப்பட்டிருந்தது. | பொருத்தமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. | உரிய காலத்தில் பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

### 3.4 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் 21,209 ஆதன உரிமையாளர்களுக்கு K படிவம் விநியோகிக்கப்பட்டிருக்கவில்லை. | இனி வருங்காலங்களில் இத்தவறுகள் சீர்செய்யப்படும். | சட்டத்திற்கமைய உரிய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

### 3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

#### 3.5.1 சுவீகரிக்கப்படாத சொத்து

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபையினால் பயன்படுத்தப்படுகின்ற 06 வாகனங்கள் நாளதுவரை சபையின் பெயருக்கு உரிமை மாற்ற நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | உரிமை மாற்றம் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. | வாகனங்களின் உரிமையை மாற்றுவதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

#### 3.5.2 வருடாந்த பொருள் மெய்மையாய்வு

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| இரண்டு உப அலுவலகங்களில் 228 புத்தகங்கள் வருடாந்த பொருள் மெய்மையாய்வின் போது பார்வைக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. | குறைபாடுகள் சம்பந்தமாக உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீண்டுவரும் செலவினங்களின் பாதீட்டு செலவினத்திற்கும் உண்மை செலவினத்திற்கும் இடையே கணிசத்தன்மையான வேறுபாடுகள் காணப்படுவதால் இது செலவின பாதீட்டின் குறைபாடாக காணப்படுகின்றது. | இறந்தவர்களின் ஓய்வூதியங்கள் குறைவடைந்தமை காரணமாக செலவினத்தில் குறைவு ஏற்பட்டுள்ளது. | பாதீட்டினை சரியான முறையில் திட்டமிடுவதற்கான உரிய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

**4.2 உள்ளகக் கணக்காய்வு**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| உள்ளகக்கணக்காய்வு அறிக்கைகள் உரிய காலப்பகுதியில் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | இனிவருங்காலங்களில் இத்தவறு சீர்செய்யப்படும். | உள்ளகக்கணக்காய்வு அறிக்கைகள் உரிய காலத்தில் சமர்ப்பிக்கப்பட நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |